தலைப்பு 257 – களுத்துறை மாவட்டச் செயலகம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 257 – களுத்துறை மாவட்ட செயலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் களுத்துறை மாவட்ட செயலகத்தின் இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 மே 26 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான களுத்துறை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் களுத்துறை மாவட்ட செயலகத்தினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை களுத்துறை மாவட்ட செயலகத்தினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும்

பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2023 திசெம்பர் 31 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட கடந்த ஆண்டுக்கான நிதி அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்த 04 நிதியல்லாத சொத்துக்களின் இறுதி மீதிகளை, 2024 திசெம்பர் 31 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டுக்கான நிதி அறிக்கைகளிலுள்ள நிதியல்லாத சொத்துக்கள் பற்றிய கூற்றின் (SA-82) ஆரம்ப மீதியுடன் ஒப்பிடும் போது ரூபா 70,978,258 இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.	2023 ஆம் ஆண்டின் SA 82 புதிய சிகாஸ் இணையப் பயன்பாட்டினால் உருவாக்கப்பட்ட நிதியல்லாத சொத்துக்கள் அறிக்கையில் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அதன் மதிப்புகள் சரியாகக் குறிப்பிடப்படவில்லை என்பது.	இணக்கமின்மைகளுக்கு கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டியதுடன் இணக்கமின்மைகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டுக்கான நிதி கூற்றுகளுடன் இணைக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் அறிக்கை (SA-82) மற்றும் பொழிப்பு அறிக்கை (SA-80) ஆகியவற்றுக்கிடையே கட்டிடங்கள், இயந்திரங்கள் மற்றும்	SA80 அறிக்கையில் உள்ள திறைசேரி அச்சிடப்பட்ட மீதிகள் மாறியதால், அதைச் திருத்துவதற்கு பேரேட்டுக் குறிப்புக்கள்	இணக்கமின்மைகளுக்கு கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டியதுடன் இணக்கமின்மைகளை திருத்துவதற்கு நடவடிக்கை

	உபகரணங்கள், நிலம் மற்றும் நடைமுறை வேலைகள் போன்ற நிலையான சொத்துக்களின் ஆண்டின் மொத்தச் சேர்க்கைகள் மற்றும் நீக்கங்களின் மொத்த மதிப்பில் முறையே ரூபா 69,602,451 மற்றும் ரூபா 2,587,807 ஆன வேறுபாடு காணப்பட்டது.	திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளன என்பது.	எடுக்க வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டுக்கான நிதி அறிக்கைகளுடன் இணைக்கப்பட்ட நிதியல்லாத சொத்துக்கள் அறிக்கை (SA-82) மற்றும் மீளாய்வாண்டுக்கான மாவட்டச் செயலகத்தின் நிலையான சொத்துக்கள் அசைவு அறிக்கை ஆகியவற்றுக்கிடையே இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், நடைமுறை வேலைகள் ஆகிய நிலையான சொத்துக்கள் உருப்படிகளில் ஆண்டினுள்ளான சேர்க்கைகள், ஆண்டின் நீக்கங்கள், ஆரம்ப மீதிக்கான சரிசெய்தல்கள் மற்றும் பரிமாற்றங்கள் ஆகிய மொத்த மதிப்புகளுக்கு இடையில் முறையே ரூபா 2,609,563, ரூபா 2,230,075, ரூபா 188,542 மற்றும் ரூபா 83,257 ஆன வேறுபாடுகள் காணப்பட்டது.	SA80 அறிக்கையில் உள்ள திறைசேரி அச்சிடப்பட்ட மீதிகள் மாறியதால், அதைச் திருத்துவதற்கு பேரேட்டுக் குறிப்புக்கள் திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளன என்பது.	இணக்கமின்மைகளுக்கு கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டியதுடன் இணக்கமின்மைகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	கணக்காய்வு மாதிரிப் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்ட பண்டாரகம, பேருவளை, களுத்துறை, பாலிந்தனுவர மற்றும் மதுராவல பிரதேச செயலகங்களால் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான நிலையான சொத்துக் உருப்படிகள் பெற்றுக் கொண்டமை தொடர்பான அறிக்கையின் படி உள்ள மீதிக்கும், மீளாய்வாண்டுக்காக களுத்துறை மாவட்டச் செயலகத்தால் பேணப்பட்டு வந்த நிலையான சொத்துக்கள் அசைவு அறிக்கையின் படி உள்ள மீதிக்கும் இடையில் ரூபா 8,169,048 கூட்டுத்தொகையான வேறுபாடு காணப்பட்டது.	பதில்கள் வழங்கப்படவில்லை.	இணக்கமின்மைகளுக்கு கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டியதுடன் இணக்கமின்மைகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(உ)	பண்டாரகம, களுத்துறை, பேருவளை மற்றும் மதுராவல பிரதேச செயலகங்களுக்காக மீளாய்வாண்டில் பெறப்பட்ட 12 பிளாஸ்டிக் கதிரைகள், 02 மடிக்கணினிகள், 01 அச்சுப்பிரதி இயந்திரம், 02 அல்பா அலுமாரிகள், 01 ஸ்கேனர், 01 CPU, 01 மொனிட்டர், 03 தாறபோலின் தாள்கள் மற்றும் 43 சூரிய மின் குமிழ்கள் என்பன நிலையான சொத்துக்கள் அசைவு அறிக்கையில் சேர்க்கப்பட்டிருக்காததுடன், அந்த நிலையான சொத்துக்கள் மீளாய்வாண்டில் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.	பதில்கள் வழங்கப்படவில்லை.	கணக்கீடு செய்யப்படாத நிலையான சொத்துக்களைக் கணக்கீடு செய்யவும் மற்றும் எதிர்காலத்தில் இத்தகைய குறைபாடுகளைத் தவிர்க்கும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஊ)	ரூபா 12,680,000 கிரயமான களுத்துறை மாவட்டச் செயலாளரின் உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் கிரயக் கணக்காய்வுக்கு வழங்கப்படாத மில்லனிய பிரதேச செயலகத்தின் புதிய இருமாடிக் கட்டிடத்தின் பெறுமதி என்பன மீளாய்வாண்டின் இறுதி வரை நிலையான சொத்துக்களாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.	களுத்துறை மாவட்டச் செயலாளரின் உத்தியோகபூர்வ இல்லம் 2025 ஆம் ஆண்டில் CIGAS இல் சேர்க்கப்படும் என்பதும், மில்லனிய பிரதேச செயலகத்தின் புதிய இருமாடிக் கட்டிடத்தின் பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக 2025 ஆம் ஆண்டில் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதும்.	கணக்கீடு செய்யப்படாத நிலையான சொத்துக்களைக் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கையின் 1.6.1 (அ) பந்திக்கமைய கடந்த வருடத்தின் நிதிக்கூற்றுகளுடன் இணங்கியிருக்கவில்லை.

(ஆ) கடந்த வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த இந்த அறிக்கையின் 1.6.1(அ) பந்தியின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மாவட்டச் செயலகத்தின் நிதிக் கட்டுப்பாடுக்குச் செயல்திறன் வாய்ந்த உள்ளகக் கட்டுப்பாட்டு முறையொன்றைத் தயாரித்து பேணி வருகின்றமை தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியதுடன், அந்த முறையின் செயல்திறன் குறித்து அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டு அதற்கேற்ப பயனுள்ள முறையில் முறைமையை முன்னெடுத்துச் செல்லத் தேவையான மாற்றங்களைச் செய்ய வேண்டும் எனவும், அந்த மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அத்தகைய மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் அறிக்கைகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.	நிதிக் கட்டுப்பாடு மற்றும் செயல்திறன் வாய்ந்த உள்ளகக் கட்டுப்பாட்டு முறையைப் பேணுவதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றதுடன், அவ்வப்போது மேலும் மேம்படுத்தப்பட வேண்டிய முறைமைகள் இனங்காணப்பட்டு அதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகளை புதிதாக அறிமுகப்படுத்துதல், பொது அறிவுறுத்தல் கடிதங்கள் மூலம், பிரதேச செயலாளர்களின் கூட்டங்கள், கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் போன்ற பல்வேறு சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்படுவதுடன், எதிர்காலத்தில் மேலும் மேம்படுத்தப்பட வேண்டிய முறைமைகள் இனங்காணப்பட்டு அதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையானவாறு குறித்த காலப்பகுதிகளுக்குள் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதில்கள் வழங்கப்படுவதாகப் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அறிக்கையின் 4.6	Whatsapp, email போன்ற முறைகள் மூலம் பதில்களைப் பெற்று தாமதமின்றி பதில்களை அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பது.	கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு விரைவாகப் பதில்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பந்தியின் படி கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில்கள் வழங்கப்படவில்லை.

3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	இணங்காமை	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை			
(i)	XIX ஆம் அத்தியாயத்தின் 5.3.2 ஆம் பந்தி	குறித்த உத்தியோகத்தரின் சம்பளத்திலிருந்து மதிப்பிடப்பட்ட வீட்டு வாடகை அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், இங்கிரிய மற்றும் பண்டாரகம உதவிப் பிரதேச செயலாளர்களிடமிருந்து வீட்டு வாடகைக்காக அவர்களது சம்பளத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 331,065 அறவிடப்படவில்லை.	தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 331,065 என்பது.	தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்த உத்தியோகத்தரின் சம்பளத்திலிருந்து மதிப்பிடப்பட்ட வீட்டு வாடகை அறவிடப்பட வேண்டியதுடன் அவ்வாறு செய்யாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	XXIX ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவு	04 பிரதேச செயலகங்களில் 01 மாதம் முதல் 8 ஆண்டுகள் வரையிலான காலப் பகுதிக்கு முன்னர் இறந்த 06 உத்தியோகத்தர்களுக்குரிய மொத்தம் ரூபா 741,373 கடன் நிலுவை குறித்த ஏற்பாடுகளின் படி மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்க்கப்படவில்லை.	இந்தக் கடன் நிலுவைகளில் ஒரு கடன் நிலுவை தவணைகளில் பெறப்பட்டு வருவதாகவும், மற்றக் கடன் நிலுவைகள் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களின் மரணப் பணிக்கொடை கிடைத்த பிறகு அறவிடப்படும் என்பது.	நிலுவைக் கடன் மீதிகளை விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் தீர்த்து வைத்து கடன்களை விரைவாக அறவிட நடவடிக்கை எடுத்தல்.

	(iii)	XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.2. 4.2.4, 4.2.5, 4.5, 4.6 மற்றும் 6.3	உத்தியோகத்தர் ஓய்வு பெற்று 03 மாதங்களுக்கு மேல் ஆகியிருந்த போதிலும் மாவட்டச் செயலகத்திலும், ஒரு பிரதேச செயலகத்திலும் அறவிடப்படாத மொத்தம் ரூபா 597,689 பெறுமதியான 04 கடன் நிலுவைகள் காணப்பட்டன.	இதில் சில கடன் நிலுவைகள் தவணைகளில் அறவிடப்பட்டு வருகின்றது என்பது.	- மேற்படி -
	(iv)	XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6	களுத்துறை பிரதேச செயலகத்தில் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட ஒரு உத்தியோகத்தரிடமிந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 184,030 கடன் நிலுவை காணப்பட்டது.	மாதாந்தம் ரூபா 2000 வீதம் தவணைகளில் அறவிடப்பட்டு வருகின்றது என்பது.	- மேற்படி -
	(v)	XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பிரிவு	மாவட்டச் செயலகத்திலும் 03 பிரதேச செயலகங்களிலும் பதவியை விட்டு நீங்கிய 06 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா 445,495 கடன் நிலுவைகள் மீளாய்வாண்டின் இறுதி வரை ஏற்பாடுகளின் படி அறவிடப்படவில்லை.	இதில் சில கடன் நிலுவைகள் தவணைகளில் அறவிடப்பட்டு வருகின்றது என்பது.	- மேற்படி -
(ஆ)	நிதிப் பிரமாணம் 880 மற்றும் 2022 மார்ச் 16 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 04/2022 கொண்ட உள்நாட்டலுவல்கள்		பிணை வைக்கப்பட வேண்டும் என விதிக்கப்பட்ட அனைத்து அரச உத்தியோகத்தர்களாலும் பிணை	பிணை வைப்புப் பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	நிதிப் பிரமாணம் மற்றும் உரிய சுற்றறிக்கையின் படி பிணை வைப்புகளைப் பெற வேண்டியதுடன்

	இராஜாங்க அமைச்சுச் சுற்றறிக்கை	வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், களுத்துறை மாவட்டச் செயலகத்திலும் 08 பிரதேச செயலகங்களிலும் அவ்வாறு பிணை வைக்கப்பட வேண்டிய 53 உத்தியோகத்தர்களால் சுற்றறிக்கையின் படி வைக்கப்பட வேண்டிய ரூபா 447,000 பிணை மதிப்பில் எந்தப் பணமும் வைப்பிலிடப்பட்டிருக்காததுடன் , மேலும் 17 உத்தியோகத்தர்களால் அவ்வாறு வைக்கப்பட வேண்டிய பிணை மதிப்பை விட ரூபா 87,098 குறைவாக வைப்பிலிடப்பட்டிருந்தது.		இணக்கம் தெரிவிக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	2016 பெப்ரவரி 25 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 3/2016 கொண்ட அரச நிர்வாகச் சுற்றறிக்கை	2016 ஜனவரி 01 ஆம் திகதிக்குப் பிறகு ஓய்வு பெறும் ஓய்வூதியர்களுக்கு மாதாந்தம் ரூபா 3,500 இடைக்கால கொடுப்பனவு வழங்கப்பட வேண்டியதில்லை என்ற போதிலும், பாணந்துறை பிரதேச செயலகத்தில் ஒரு ஓய்வூதியருக்கு அவ்வாறு ரூபா 3,500 மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டதால் ரூபா 280,000 அதிகமாக வழங்கப்பட்டிருந்தது.	மேலதிக ஆலோசனைகளைப் பெறுவதற்காக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அதிகமாக வழங்கப்பட்ட பணத்தை அறவிட நடவடிக்கை எடுத்தல்.

(ஈ)	2016 பெப்ரவரி 25 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 3/2016 கொண்ட அரச நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2019 ஜூன் 11 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 01/2019 கொண்ட ஓய்வூதியச் சுற்றறிக்கை	பொது நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016 இற்குச் சீராக்கப்பட்ட ஓய்வூதியத்தை மீண்டும் ஓய்வூதியச் சுற்றறிக்கை 01/2019 இற்கு அமைய திருத்துவது அவசியமற்றிருந்த போதிலும், பாணந்துறை பிரதேச செயலகத்தினால் 06 ஓய்வூதியர்களுக்கு அவ்வாறு ஓய்வூதியம் மீண்டும் திருத்தப்பட்டு 2019 ஜூலை மாதம் முதல் 2024 திசெம்பர் மாதம் வரை வழங்கப்பட்டதால் ரூபா 1,636,902 அதிகமாக வழங்கப்பட்டிருந்தது.	கோவைகளின் சரியான தன்மையைப் பரீட்சிப்பு செய்ய நடவடிக்கை எடுப்பதாக.	- மேற்படி -
(உ)	2019 மே 30 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 02/2019 கொண்ட அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தி	இறந்த ஓய்வூதியர்களின் தகவல்களைக் காலத்துக்குக் காலம் பெற்று ஓய்வூதியம் பெறுபவர்களின் பெயர் பட்டியலைப் இற்றைப்படுத்தாததன் மூலம் பாணந்துறை, பேருவளை, ஹொரணை மற்றும் களுத்துறை பிரதேச செயலகங்களில் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் இறந்த 51 ஓய்வூதியர்களுக்காகச் சட்டவிரோதமாக அதிகமாகக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு மேலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,748,003 நிலுவைத் தொகை காணப்பட்டது.	அறவிடுவதற்கான தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பது.	சுற்றறிக்கையின் பிரகாரம் ஆவணங்களைப் இற்றைப்படுத்தாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கவும், மேலும் அதிகமாக வழங்கப்பட்ட பணத்தை அறவிடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஊ)	2019 ஜுன் 11 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 14/2019 கொண்ட ஓய்வூதியச் சுற்றறிக்கை	ஓய்வூதியம் திருத்தப்பட்ட பின்னர் இதுவரை வழங்கப்பட்ட இடைக்காலக் கொடுப்பனவை நிறுத்த வேண்டியிருந்த போதிலும், ஆயுதப்படை / பொலிஸ் விதவைகள் ஓய்வூதியச் சுற்றறிக்கைக்கு அமையச் சீராக்கம் செய்தலின் பின்னரும் விதவைகள் ஓய்வூதியத்துடன் இணைத்து வழங்கப்படும் தங்கிவாழ்வோருக்கான கொடுப்பனவுக்கான இடைக்காலக் கொடுப்பனவு 2019 ஜுலை மாதம் முதல் 2024 திசெம்பர் மாதம் வரை 04 ஓய்வூதியர்களுக்குப் பாணந்துறை பிரதேச அலுவலகத்தினால் வழங்கப்பட்டதால் ரூபா 1,254,000 அதிகமாக வழங்கப்பட்டிருந்தது.	அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பது.	சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அதிகமாக வழங்கப்பட்ட பணத்தை அறவிட நடவடிக்கை எடுத்தல்.
(எ)	2019 மே 31 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 14/2019 கொண்ட அரச நிர்வாகச் சுற்றறிக்கை	பாணந்துறை, களுத்துறை, ஹொரணை, பாலிந்தனுவர, வலல்லாவிட்ட, மத்துகம மற்றும் பேருவளை ஆகிய 07 பிரதேச செயலகங்களில் 269 ஓய்வூதியக் கோவைகள் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சுற்றறிக்கையின் படி திருத்தப்படவில்லை.	சில கோவைகள் திருத்தப்பட்டுள்ளது என்பதும், மீதமுள்ள கோவைகளில் உள்ள ஆவணங்களின் குறைபாடுகள் பூர்த்தி செய்யப்பட்டவுடன் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	கால தாமதமாகச் செயல்பட்ட உத்தியோகத்தர்களுக்கு நடவடிக்கை எடுத்தல், மேலும் சுற்றறிக்கையின் படி ஓய்வூதியக் கோவைகளைத் திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஏ)	2019 ஜூலை 26 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 01/2019 கொண்ட திருத்தம் II ஓய்வூதியச் சுற்றறிக்கை	முப்படையினரால் வழங்கப்படும் 55 வயது வரை சம்பளம் பெறும் ஓய்வூதியர்களுக்கு 01/2019 சம்பளத் திருத்தம் பொருந்தாது என்று குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு இராணுவச் சம்பளம் பெறும் ஒரு ஓய்வூதியரின் சம்பளம் 01/2019 சுற்றறிக்கையின் படி திருத்தப்பட்டு 2019 ஜூலை மாதம் முதல் 2024 திசெம்பர் மாதம் வரை பாணந்துறை பிரதேச அலுவலகத்தினால் வழங்கப்பட்டதால் ரூபா 301,277 அதிகமாக வழங்கப்பட்டிருந்தது.	விரைவாக அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அதிகமாக வழங்கப்பட்ட பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஐ)	2019 திசெம்பர் 29 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 30/2016 கொண்ட அரச நிர்வாகச் சுற்றறிக்கை	கணக்காய்வு மாதிரிப் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்ட 03 பிரதேச செயலகங்களுக்குச் சொந்தமான 06 வாகனங்களுக்கும், மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான ஒரு வாகனத்துக்கும் குறித்த சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி எரிபொருள் தகனம் தொடர்பாகக் காலத்துக்குக் காலம் பரீட்சிப்புகள் மேற்கொள்ளப்படவில்லை.	4 வாகனங்களுக்குரிய எரிபொருள் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மற்ற வாகனங்களுக்குரிய எரிபொருள் தகன பரீட்சிப்பை விரைவாகச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	சுற்றறிக்கையின் பிரகாரம் வாகனங்களுக்குரிய எரிபொருள் தகன பரீட்சிப்புகள் காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ஒ)	2021 செப்டெம்பர் 29 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் PFD/PMD/Cir/2021/01 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கை			
(i)	2.1 மற்றும் 2.3 பந்திகள்	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு முரணாக 2024 ஆம் ஆண்டில் களுத்துறை பிரதேச செயலகத்தில் 03 நிர்மாணச் செயற்திட்டங்கள் வழங்கப்பட்டிருந்த சமூக அடிப்படை அமைப்புகள் தொடர்பான கோவைகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.	சமூக அடிப்படை அமைப்புகள் தொடர்பாகத் தனியான கோவைகள் பேணப்படவில்லை என்பது.	கணக்காய்வினால் கோரப்படும் கோவைகளை விரைவாக வழங்க பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	2.5 பந்தி	ஒப்படைக்கப்படும் நிர்மாண ஒப்பந்தங்கள் சமூக அடிப்படை அமைப்பின் / சங்கத்தின் அதிகார எல்லைக்குள் இருக்க வேண்டியிருந்த போதிலும், களுத்துறை பிரதேச செயலகத்தினால் நிர்மாணச் செயற்திட்டங்கள் அதிகார எல்லைக்கு வெளியேயுள்ள சமூக அடிப்படைச் சங்கங்களுக்கும் வழங்கப்பட்டிருந்தன.	சமுர்த்திச் சங்கங்கள் தங்களது அதிகார எல்லைக்கு வெளியேயுள்ள சங்கங்களைத் தெரிவு செய்வதற்கு ஆட்சேபனை இல்லை என்று அறிவித்துள்ளது என்பது.	சுற்றறிக்கைக்கு முரணாகச் செயற்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கவும், எதிர்காலத்தில் சுற்றறிக்கைக்கு இணங்கி நடக்கவும் வேண்டும்.
(ஓ)	2022 நவம்பர் 29 ஆம் திகதியிடப்பட்ட பொதுப் பாதுகாப்பு அமைச்சுப் பணிப்பாளர் நாயகத்தின் 06 ஆம் இலக்கச் சுற்றறிக்கை	பிரதேச செயலகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தன்னார்வச் சமூக சேவை அமைப்புகள் மூலம் வருடாந்தம் வழங்கப்பட வேண்டிய	பதில்கள் வழங்கப்படவில்லை.	சுற்றறிக்கையின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட தன்னார்வச் சமூக சேவை அமைப்புகளின் தகவல்களைப் இற்றைப்படுத்த

	ஆவணங்கள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அனைத்து அமைப்புக்கும் உரிய தகவல்களை வருடாந்தம் பெற்று அமைப்பின் மூலக் கோவையில் சேர்க்க வேண்டியிருந்த போதிலும், மாதிரிப் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்ட களுத்துறை மாவட்டத்தின் 02 பிரதேச செயலகப் பிரிவுகளில் பதிவு செய்யப்பட்ட 05 தன்னார்வச் சமூக சேவை அமைப்புகளுக்குரிய தகவல்கள் மீளாய்வாண்டில் அவ்வாறு இற்றைப்படுத்தப்படவில்லை.	நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.3 வைப்பு மீதிகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் 6 பொது வைப்புக் கணக்குகளில் மொத்தம் ரூபா 233,307,842 மீதிகள் காணப்பட்டதுடன், அவற்றில் 3 பொது வைப்புக் கணக்குகளுக்குரிய இரண்டு ஆண்டுகளைத் தாண்டிய தீர்க்கப்படாத மொத்தம் ரூபா 10,787,728 வைப்பு மீதி காணப்பட்டது. அதே போன்று, அந்த மீதியில் மொத்தம் ரூபா 1,235,951 பெறுமதியான 5 ஆண்டுகளைத் தாண்டிய வைப்புகளும் காணப்பட்டதுடன், இது தொடர்பாக நிதிப் பிரமாணம்	இதில் காலாவதியான வைப்புகளில் ஒரு பகுதி பிற்காலத்தில் தீர்க்கப்பட்டுள்ளது என்பது மற்றும் தீர்க்கப்படாத வைப்புகளை இந்த ஆண்டில் தீர்த்து வைப்பதற்கான தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பது.	காலாவதியான வைப்பு மீதிகளை விரைவாகத் தீர்த்து வைக்க வேண்டும் அல்லது நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

571(3) ஏற்பாடுகளின் படி உள்ள குறைபாடுகள் மற்றும் தவறுகளைச் சரிசெய்து உரிய தரப்பினருக்கு வைப்புப் பணத்தை செலுத்துவதற்கோ அல்லது அரச வருமானத்தில் வரவு வைப்பதற்கோ உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

4.1.1 திட்டமிடல் மற்றும் முன்னேற்ற மதிப்பீடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டுக்கான மாவட்டச் செயலகத்தால் ஒரு செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், செயற்பாட்டுத் திட்டம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டு, குறித்த காலப்பகுதிக்குள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. செயற்பாட்டுத் திட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மாவட்டச் செயலகத்தின் சில பிரிவுகளின் செயலாற்றுகையை மதிப்பிடுவதற்குத் தேவையான முக்கிய செயலாற்றுகை சுட்டிகள் எதுவும் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் , செயற்பாட்டுத் திட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த சில பிரிவுகளின் எதிர்பார்க்கப்படும் அலகு, பௌதீக / நிதி இலக்குகள் வெளியீடு, விளைவு மற்றும் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர் ஆகிய விடயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அதே போன்று,	செயற்பாட்டுத் திட்டத்தைப் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரிடம் அங்கீகாரம் பெற இந்த ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. எதிர்பார்க்கப்படும் அலகு, பௌதீக / நிதி இலக்குகள் வெளியீடு, விளைவு சம்பந்தப்பட்ட பிரிவுகளிடமிருந்து பெறப்பட வேண்டியிருந்ததால், தாமதம் ஏற்பட்டதாகவும், சம்பந்தப்பட்ட பிரிவுகளால் சமர்ப்பிக்கப்பட்ட வடிவத்திலேயே கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது என்பது. 2025 ஆம் ஆண்டில் முன்னேற்ற அறிக்கைகள் செயற்பாட்டுத் திட்டங்களுடன் இணங்கி மாத்திரம் சமர்ப்பிக்கத் தேவையான நடவடிக்கைகளை	செயற்பாட்டுத் திட்டத்தை முறையாகத் தயாரித்து குறித்த காலப்பகுதிக்குள் அங்கீகாரம் பெறுவதுடன், செயற்பாட்டுத் திட்டத்தின் படி முன்னேற்ற அறிக்கைகள் காலத்துக்குக் காலம் தயாரிக்கப்பட வேண்டும்.

மீளாய்வாண்டுக்கான மாவட்டச் செயலகத்தால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த முன்னேற்ற அறிக்கைகள் செயற்பாட்டுத் திட்டங்களுடன் இணங்கி சமர்ப்பிக்கப்படாததால், மீளாய்வாண்டில் களுத்துறை மாவட்டச் செயலகத்தின் செயலாற்றுகையை அளவிடுதலை மேற்கொள்ள முடியவில்லை.	எடுக்கப்படும் என்பது.	

4.1.2 குழு செயற்பாடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	களுத்துறை மாவட்டச் செயலகத்தின் கீழ் இயங்கும் பல்வேறு குழுக்களில் இருந்து 05 குழுக்களின் செயற்பாடு தொடர்பில் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மேற்கொண்ட பரீட்சிப்பின் போது, ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு, சுற்றாடல் குழு மற்றும் டெங்கு ஒழிப்பு குழு என்பன கூட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டில் இது 04 தடவைகள் மட்டுமே கூடியிருந்ததுடன், ஒரு வருடத்தில் 03 தடவைகள் கூட வேண்டிய மாவட்ட போதைப்பொருள் தடுப்புக் குழு அந்த ஆண்டில் ஒரு தடவை மட்டுமே கூடியிருந்தது. மேலும், ஒரு வருடத்தில் மாதத்துக்கு ஒரு தடவை நடத்த வேண்டிய மாவட்ட விவசாயக் குழுவும் மீளாய்வாண்டில் 06 தடவைகள் மட்டுமே கூடியிருந்தது. எனவே, மாவட்டத்தினுள் பயனுள்ள, அர்த்தமுள்ள சேவையை மக்களுக்கு வழங்குவதற்கு முன்மொழியப்பட்ட	மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் 2024 ஆம் ஆண்டுக்கான கூட்டத் திகதிகளை 04 கூட்டங்களுக்கு மட்டுமே வழங்கியதால், குழு மாதாந்தம் கூட நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும், 2024 ஆம் ஆண்டில் இரண்டு முக்கிய தேர்தல்கள் நடத்தப்பட்டதால் உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமைகளில் ஈடுபட்டிருந்தமை மற்றும் குழுக்களை நடத்துவதற்கு மண்டப வசதிகள் இல்லாததாலும் குழுக்கள் நடத்தப்படுவதற்குத் தடையாக இருந்தது எனவும்.	மாவட்டத்தினுள் பயனுள்ள, அர்த்தமுள்ள சேவையை மக்களுக்கு வழங்குவதற்கு முன்மொழியப்பட்ட குழுக்களின் சரியான மற்றும் காலத்திற்குரிய செயற்பாடு மிக முக்கியமானது என்பதால், அந்தக் குழுக்கள் உரியவாறு நடத்தப்பட வேண்டும்.

	குழுக்களின் சரியான மற்றும் காலத்திற்குரிய செயற்பாடு மிக முக்கியமானது என்ற போதிலும், அந்தக் குழுக்களின் காலத்திற்குரிய செயற்பாடு குறித்துப் போதுமான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.		

4.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பேருவளை பிரதேச செயலகத்தால், பரவலாக்கப்பட்ட வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடான ரூபா 500,000 இன் கீழ் ”யொவுன் கம” சனசமூக நிலையத்தின் சுமார் 500 சதுர அடி பகுதிக்கு கொங்கிரீட் இடுதல், உட்புற மற்றும் வெளிப்புற வர்ணம் பூசுதல், கதவுகள் மற்றும் ஜன்னல்களைப் பழுதுபார்த்தல், ஜன்னல்களுக்குச் சட்டகங்கள் இடுதல் போன்ற புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் , இவ்வாறு அரச நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப்பட்ட சனசமூக நிலையத்தின் கூரை அதிக அளவில் சேதமடைந்து இடிந்து விழும் நிலையில் காணப்பட்டது. இவ்வாறு பழுதுபார்க்கப்பட்ட கட்டிடம் மற்றும் காணியின் தெளிவான உரிமை கூட அடையாளம் காணப்படாத நிலையில், அத்தகைய உரிமை கூட அடையாளம் காணப்படாத, கூரை இடிந்து விழும் நிலையில் இருந்த ஒரு கட்டிடத்தைப் பழுதுபார்ப்பதற்காக அரசாங்க நிதிகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. மேற்கண்ட நிலைமைகள் குறித்துப் பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம	இந்த கட்டிடமும் காணியும் குறைவான பாவனையில் காணப்பட்ட போதிலும், எதிர்பாராத சிக்கல்கள் ஏற்படாதிருந்தால், கட்டிடத்தை பயனுள்ள நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த முடியும் எனவும், 2025 மாகாண சபை ஒதுக்கீட்டின் மூலம் கட்டிடத்தின் கூரையைச் சரிசெய்ய எதிர்பார்க்கப்படுகின்றது எனவும்.	முறையான ஆய்வின்றித் திட்டத்தைத் தெரிவு செய்த உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் , திட்டங்களுக்கான அங்கீகாரம் வழங்கும் போது பொருளாதாரப் பயன் மற்றும் முன்னுரிமை வரிசை குறித்துக் கவனம் செலுத்த வேண்டும்.

	அலுவலர் கூட எழுத்து மூலம் சுட்டிக்காட்டியிருந்த போதிலும், இதற்காக நிதி பயன்படுத்த அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன், இந்த கட்டிடமும் காணியும் அதிக அளவில் களைகள் வளர்ந்து, குறைவான பாவனையில் காணப்பட்டன.		
(ஆ)	2014 ஆம் ஆண்டில் ”பளாத் நெகும” அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஹொரணை பிரதேச செயலகப் பிரிவில் அபிவிருத்தித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் ரூபா 7,500,000 ஹொரணை அரச ஔசுசலவைக் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அந்தக் கட்டிடம் 2016 ஆம் ஆண்டில் ரூபா 7,075,000 மதிப்பீட்டுச் செலவில் கட்டி முடிக்கப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படாமல் குறைவான பாவனையில் காணப்பட்டது. கட்டிடம் கட்டும் போது உரிய தரப்பான மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்துடன் நிர்மாணத் திட்டங்கள் தொடர்பில் இணக்கம் ஏற்படாததாலும், இரு தரப்பினருக்கும் இடையே காணிப் பரிமாற்றம் மற்றும் கட்டிட நிர்மாணம் தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய சட்டத் தேவைகள் தொடர்பான சிக்கல்கள் காரணமாகவும், நிர்மாணம் முடிந்து சுமார் 08 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், இந்தக் கட்டிடம் குறைவான பாவனையில் காணப்பட்டதுடன், உரிய பாவனை மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.	இந்தக் கட்டிடம் குறைவான பாவனையில் காணப்பட்டு அழிந்து கொண்டிருந்ததால், உரிய நிறுவனங்களின் இணக்கத்தைப் பெற்று, 04 கள உத்தியோகத்தர்களின் அலுவலகங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்பது.	உரிய தரப்பினரை ஒருங்கிணைத்து, கட்டிடத்தை நோக்காகக் கொண்ட பணிக்காகப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கவும், மேலும் ஒரு திட்டம் ஆரம்பம் முதல் முடியும் வரை உரிய அரச நிறுவனங்களுக்கிடையே முறையான ஒருங்கிணைப்பு, வழிகாட்டல் மற்றும் மேற்பார்வையைப் பேணுவதற்கு ஒரு வேலைத்திட்டத்தை வகுக்க வேண்டும்.

(இ) சனாதிபதி அலுவலக செலவினத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டு, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பிரதேச செயலக மட்டத்தில் வறுமையை ஒழிக்கும் நோக்கத்துடன்

நடைமுறைப்படுத்தப்பட்ட ‘‘கிராம சக்தி” மக்கள் வேலைத் திட்டத்தின் கீழ், மாதிரிப் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்ட 05 பிரதேச செயலகப் பிரிவுகளில் இரண்டு கட்டங்களின் கீழ் 57 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றில் 2024 திசெம்பர் 31 அன்று 45 சங்கங்கள், அதாவது 79 சதவீதம் செயலற்ற நிலையில் காணப்பட்டதால், அந்தத் திகதியில் அந்தக் குழுக்களின் வங்கிக் கணக்குகளில் இருந்த ரூபா 21,821,998 குறைவான பாவனையில் காணப்பட்டது. அதற்கு மேலதிகமாக, 03 பிரதேச செயலகப் பிரிவுகளில் செயலாற்றும் நிலையில் இருந்த குழுக்களின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட சுயதொழில் கடன்களில் ரூபா 1,566,845 2024 திசெம்பர் 31 அன்று அறவிடப்படாத செயலற்ற கடனாகக் காணப்பட்டது. சுற்றறிக்கையின் படி செயலாற்றும் மட்டத்தில் உள்ள கிராம சக்தி சங்கங்களின் அரசியலமைப்பின் படி நிறைவேற்றுக் குழுவைக் கூட்டி, குறித்த வலயத்துக்குப் பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தரின் ஒருங்கிணைப்புடன் சமுதாய அபிவிருத்திப் பணிகளை ஆரம்பிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்கான தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இரண்டாம் கட்ட கிராம சக்தி சங்கங்களுக்கு வழங்கப்பட்ட நிதியைப் பயன்படுத்துவது

கிராமிய அபிவிருத்தி பணியகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தல் கடிதத்திற்கு அமைய, வங்கிக் கணக்குகளில் குறைவான பாவனையில் உள்ள பணத்தை மாவட்டச் செயலாளரின் பொது வைப்புக் கணக்கில் வரவு வைக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும். செயலற்ற சங்கங்கள் தொடர்பாக உரிய மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகச் சௌபாக்கியா பணியகத்திற்கு ஆவணங்களைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும்.

முறையான வேலைத்திட்டத்தை உருவாக்கி, சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் படி சங்கங்களைச் செயலாற்றச் செய்து நடைமுறைப்படுத்த வேண்டும் அல்லது செயலற்ற சங்கங்களின் பண மீதியை அரசாங்கத்திற்குப் பொறுப்பேற்க வேண்டும்.

	தொடர்பான சுற்றறிக்கையின் படி, செயலற்ற மட்டத்தில் உள்ள கிராம சக்தி சங்கங்களின் நிதி ஒதுக்கீட்டை செயலாற்றும் மட்டத்தில் உள்ள சங்கங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற போதிலும், அதற்கான தேவையான நடவடிக்கைகள் காலத்துக்குக் காலம் எடுக்கப்பட்டிருக்கவில்லை.		

4.3 உள்நாட்டு நிதிகளின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ஹொரணை பிரதேச செயலகத்தில் சௌபாக்கியா உற்பத்தி கிராமங்கள் வேலைத்திட்டம் - 2021 இன் கீழ் ஒலபொடுவ காளான் வளர்ப்பு தொடர்பான உற்பத்திகளை மேம்படுத்தும் திட்டத்திற்காக ரூபா 7,795,419 செலவிடப்பட்டிருந்தது. 2024 செப்டெம்பர் 30 ஆம் திகதியில் 14 பயனாளிகள் வெளிநாடு செல்லுதல், வதிவிடத்தை மாற்றுதல் போன்ற பல்வேறு காரணங்களால் குறித்த தொழிலில் இருந்து விலகியிருந்தனர் அல்லது தற்காலிகமாகத் தொழிலை நிறுத்தியிருந்ததுடன், 12 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட பொருட்கள் மற்றும் உபகரணங்களும் குறைவான பாவனையில் காணப்பட்ட போதிலும் இந்தப் பயனாளிகள் தொடர்பிலும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. குறித்த திட்டத்தின் கீழ் காளான் உற்பத்திகளை மேம்படுத்துவதற்காக 02 பொது வசதி மத்திய நிலையங்கள் 02 தனியார் காணிகளில் நிறுவப்பட்டிருந்ததுடன், அங்கு பொதுப் பாவனைக்காகக்	இந்தப் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணத்தை பயனுள்ள முறையில் பயன்படுத்த எதிர்பார்த்த போதிலும், நாட்டில் நிலவிய கொரோனா தொற்றுநோய், பொருளாதார நெருக்கடி காரணமாகப் பொருட்களின் மற்றும் சேவைகளின் விலைகள் வேகமாக அதிகரித்தமை, பயனாளிகளின் நோக்கங்கள் சிதைந்ததால் அவர்கள் சோர்வடைந்தமை மற்றும் மீண்டும் அவர்களை வலுப்படுத்துவது கடினமாக இருந்தமை போன்ற பல சிக்கல்களால் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைய முடியவில்லை என்பது.	திட்டத்தை முறையாக மேற்பார்வை மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளாத உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், தற்போதுள்ள குறைபாடுகளைப் பூர்த்தி செய்து திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை நோக்கி வழிநடத்தப்பட வேண்டியதுடன் எதிர்காலத்தில் முறையான சாத்தியக்கூறு ஆய்வுக்குப் பிறகு நடைமுறைப்படுத்தக்கூடிய திட்ட முன்மொழிவுகளைத் தெரிவு செய்ய வேண்டும்.

காளான் ஊடகக் கலவை மற்றும் பொதியிடும் இயந்திரங்கள் மற்றும் காளான் அவிக்கும் இயந்திரம் என்பன தலா 01 வீதம் நிறுவப்பட்டிருந்தன. இந்த பொது வசதி மத்திய நிலையங்களும் அதற்காக வழங்கப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களும் ஆரம்பம் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை குறைவான பாவனையில் காணப்பட்டதுடன் மேலே குறிப்பிட்ட திட்டத்தின் கீழ் திட்ட முன்மொழிவைத் தயாரித்தல், பரிந்துரைத்தல், அங்கீகரித்தல் ஆகியவற்றின் போது குறித்த திட்டத்தின் பொது மத்திய நிலையங்களின் தேவை மற்றும் பாவனை குறித்து முறையான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அதற்கேற்பத் திட்டங்கள் தயாரிக்கப்படவில்லை.

(ஆ) ஹொரணை பிரதேச செயலகத்தில் ”சௌபாக்கியா உற்பத்தி கிராமங்கள்” வேலைத்திட்டம் - 2021 இன் கீழ் மரக்கறி, பழங்கள் மற்றும் இலைக் காய்கறிகளை நீரிழக்கச் செய்யும் திட்டத்தின் கீழ் சௌபாக்கியா சங்கத்திற்கு மொத்தம் ரூபா 5,845,504 பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களும், சங்க உறுப்பினர்களுக்குத் தனிப்பட்ட மானியங்களாக மொத்தம் ரூபா 614,240 பெறுமதியான உபகரணங்களும் வழங்கப்பட்டிருந்தன. குறித்த திட்டத்தின் கீழ் உணவுப் பொருட்களை நீரிழக்கச் செய்யும் பிரதான செயலாக்க மத்திய நிலையம் தனியார் காணியில் நிறுவப்பட்டிருந்ததுடன், அங்கு மேலே குறிப்பிட்ட இயந்திரங்கள் மற்றும்

செயற்திட்டத்தை ஒப்பந்தத்தின் படி மேலும் முன்னெடுத்துச் செல்ல முடியாது என்றால், குறித்த திட்ட உபகரணங்களைத் திரும்ப ஒப்படைக்கவும், பயிற்சிக்குச் செலவிடப்பட்ட அரச பணத்தைத் திரும்பச் செலுத்த நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட திட்டப் பொறுப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பது.

- மேற்படி -

உபகரணங்கள் ஒப்பந்தம் செய்யப்படாமல் நிறுவப்பட்டிருந்தன. வழங்கப்பட்ட அறிவுறுத்தல் தொகுதியின் படி, தனயார் கட்டிடங்களில் பொது மத்திய நிலையங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களில், ஒரு பொதுவான இடத்தை அமைக்கும் வரை முறையான சட்டப்பூர்வ நடைமுறையின் மூலம் பிரதேச செயலாளர் மற்றும் குறித்த காணி உரிமையாளருடன் இணக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியிருந்த போதிலும், அத்தகைய முறையான சட்டப்பூர்வ நடைமுறை பின்பற்றப்படவில்லை. இங்குள்ள உற்பத்திகள் தனிப்பட்ட வர்த்தக நாமத்தின் கீழ் பெயரிடப்பட்டிருந்ததுடன் தற்போது சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் தலைவரால் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றன என்பதனால் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு உறுப்பினர்கள் தொடர்ந்து கோரப்பட்ட போதிலும் அவர்கள் இன்னும் அதில் ஈடுபடாததுடன் தானாக வளரும் பலா, கொஹில போன்றவற்றை வழங்குவதற்கு மேலதிகமாக, திட்டத்திற்குத் தேவையான இலைக் காய்கறிகளைப் பயிரிடுமாறு உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து அறிவிக்கப்பட்ட போதிலும் திருப்திகரமான பலன் கிடைக்கவில்லை. திட்டத்தின் இயந்திரங்கள் அதிகபட்சமாகப் பயன்படுத்தப்படாததுடன் திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைய முடியவில்லை.

(இ)	”சௌபாக்கியா உற்பத்தி கிராமங்கள்” வேலைத் திட்டத்தின் கீழ் வலல்லாவிட்ட பிரதேச செயலகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட மண்டகல கறுவா கிராமம் திட்டத்திற்காக ஒரு கறுவா பிரித்தெடுக்கும் மத்திய நிலையத்தைக் நிர்மாணிப்பதற்காகவும் மற்றும் 60 பயனாளிகளுக்குக் கறுவா நாற்றுகள் மற்றும் கறுவா உபகரணங்களை வழங்குவதற்காகவும் ரூபா 4,869,111 செலவிடப்பட்டிருந்தது. இதன் திட்ட முன்மொழிவின் படி, கறுவா பிரித்தெடுக்கும் மத்திய நிலையத்தின் எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தியாகக் கறுவா இலை மற்றும் பட்டையைப் பயன்படுத்தி எண்ணெய் உற்பத்தி முறையே மாதாந்தம் 15 மற்றும் 12 போத்தல்களாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இந்தக் கறுவா உற்பத்தி மையம் ஆரம்பிக்கப்பட்டு சுமார் 02 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், இதுவரை 27 போத்தல்கள் கறுவா எண்ணெய் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்தக் கறுவா எண்ணெய் பிரித்தெடுக்கும் மையத்தில் உற்பத்திப் பணிகள் 2024 பெப்ரவரி 10 ஆம் திகதிக்குப் பிறகு மேற்கொள்ளப்படவில்லை.	கறுவா எண்ணெயின் விலை குறைந்ததைத் தொடர்ந்து உற்பத்தி குறைந்துள்ளது என்பது.	- மேற்படி -
(ஈ)	”சௌபாக்கியா உற்பத்தி கிராமங்கள்” வேலைத் திட்டத்தின் கீழ் வலல்லாவிட்ட பிரதேச செயலகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட உள்நாட்டுச் சந்தைக்கு மேலதிகமாக ஏற்றுமதிச் சந்தையை இலக்காகக் கொண்டு பிரதேசத்தில் வெற்றிலைச் செய்கையைப் பரவலாக்கும் திட்டத்திற்காக 2021 ஆம் ஆண்டில் ரூபா	வெற்றிலைச் செய்கை அடிக்கடி பற்றீரியா நோய்களுக்கு உள்ளாவதால், பயனாளிகள் தற்காலிகமாக வேறு பயிர்களுக்கு மாறியுள்ளனர் என்பது.	- மேற்படி -

	7,356,259 செலவிடப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்தின் மூலம் மாதாந்தம் ஒற்றைத் தூண் முறைமையின் கீழ் 938 வெற்றிலைக் கட்டுகளும், பாத்தி முறைமையின் கீழ் 3600 வெற்றிலைக் கட்டுகளும் என மாதாந்தம் 4538 வெற்றிலைக் கட்டுகளை உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்பட்ட போதிலும், திட்ட முன்னேற்ற அறிக்கைகளின் படி 89 பயனாளிகளில் 28 பயனாளிகள் மட்டுமே வெற்றிலைச் செய்கையில் ஈடுபட்டிருந்த போதிலும் அந்தப் பயனாளிகளில் மூவரைத் தவிர மற்ற அனைத்துப் பயனாளிகளின் வருமானம் ரூபா 10,000 இற்கும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. அதே போன்று, ஆரம்பப் பயனாளிகள் 89 பேரில் 61 பேர் திட்ட நோக்கத்திலிருந்து விலகி வேறு பயிர்களைப் பயிரிடத் திரும்பியிருந்தனர்.		
(உ)	”சௌபாக்கியா உற்பத்தி கிராமங்கள்” வேலைத்திட்டம்-(2021) இன் கீழ் மத்துகம பிரதேச செயலகத்தால் ஒரு சௌபாக்கியா சங்கத்திற்கு ரூபா 150,000 பெறுமதியான நீரிழக்கச் செய்யும் இயந்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் , அது வழங்கப்பட்ட நாள் முதல் சுமார் 2 1/2 ஆண்டுகள் போதுமான பாவனையின்றிச் செயலற்றுக் காணப்பட்டதால், பிரதேச மகளிர் சங்கத்தின் வேண்டுகோளின் பேரில் 2024 ஜூலை 15 ஆம் திகதி அந்தச் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு வழங்கப்பட்ட போதிலும், அந்தச் சங்கமும் இயந்திரத்தில் இருந்த குறைபாடுகள் காரணமாக அதைப் பயன்படுத்தவில்லை எனவும் எனவே நீரிழக்கச் செய்யும் இயந்திரத்தை	இந்த இயந்திரத்தில் உள்ள சிறிய குறைபாடுகளைச் சரிசெய்து பயன்படுத்தக்கூடிய வேறு சங்கத்தைக் கண்டுபிடித்து மீண்டும் அந்த நீரிழக்கச் செய்யும் இயந்திரத்தை வழங்க நடவடிக்கை எடுப்பதாக.	- மேற்படி -

வழங்கியதன் நோக்கமான நீரிழக்கச் செய்யும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உணவைப் பாதுகாப்பதன் மூலம் உறுப்பினர்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான பங்களிப்பை வழங்க முடியாமல் போயிருந்தது. தேவைப்பாட்டின் மீதான முறையான சாத்தியக்கூறு ஆய்வு இன்றி மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகள் காரணமாக இவ்வாறு திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட செலவுகள் செயலற்றுப் போயிருந்தன.

(ஊ) பாணந்துறை பிரதேச செயலகத்தால் 2021 ”சௌபாக்கியா உற்பத்தி கிராமங்கள்” வேலைத் திட்டத்தின் கீழ் ரூபா 9,521,994 மதிப்பீட்டைக் கொண்ட பாதணிகள் உற்பத்தித் திட்டத்திற்காக 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 7,374,853 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், பாதணிகள் திட்டத்திற்காக ரூபபா 873,967 மட்டுமே செலவிடப்பட்டிருந்தது. மேலும், 2023 ஆம் ஆண்டிற்காக இந்தத் திட்டத்திற்காக ரூபா 1,268,463 ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும், பாணந்துறை பிரதேச செயலகத்தால் அந்த ஆண்டில் பாதணிகள் திட்டத்திற்காக ரூபா 376,057 மட்டுமே செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி அதிகபட்சமாகச் செலவிடப்படும் வகையில் திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்த உரியட பொறுப்பாளர்கள் தவறியிருந்ததுடன் சௌபாக்கியா உற்பத்தி கிராமங்கள் வேலைத் திட்டத்தின் கீழ்

2021 திருத்தப்பட்ட மதிப்பீட்டுடன் சமர்ப்பிக்கப்பட்ட திட்டத்தை நடைமுறைப்படுத்தப் போதுமான கால அவகாசம் இல்லாததால் திருத்தங்கள் அங்கீகரிக்கப்படவில்லை எனவும், 2023 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய பொருளாதாரச் சிக்கல்கள் காரணமாகப் பாதணிகள் உற்பத்தி கிராமத்தின் பயனாளிகள் கோரிய உபகரணங்களுக்காக அவர்கள் செலுத்த வேண்டிய 50 சதவீதச் பணத்தைச் செலுத்த பயனாளிகள் தவறினர் எனவும்.

திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு திட்ட முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்பட வேணடியதுடன் வேலைத் திட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதற்காக ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி தமது பிரதேச செயலகப் பிரிவின் அபிவிருத்திக்குப் பங்களிப்பு வழங்குவதை உகந்த மட்டத்தில் பேண ஒரு வேலைத் திட்டத்தை வகுக்க வேண்டும்.

	எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதற்காக ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி தமது பிரதேச செயலகப் பிரிவின் அபிவிருத்திக்குப் பங்களிப்பு வழங்குவது உகந்த மட்டத்தில் காணப்படவில்லை.		
(எ)	‘‘மலைநாட்டுத் தசாப்தம் 2024 – 2033 தசவிதம் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தின்” கீழ் பேருவளை மற்றும் மத்துகம பிரதேச செயலகங்களால் வீட்டிலிருந்து ஆடுகள் வளர்க்கும் வேலைத் திட்டத்திற்காக 09 பயனாளிகளுக்கு ரூபா 715,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு பௌதீகப் பரீட்சிப்புக்களின் போது வெளிப்படுத்தப்பட்டவாறு, அவ்வாறு வழங்கப்பட்ட ஆடுகள் மற்றும் குட்டிகள் பல்வேறு நோய்களால் இறத்தல், வழங்கப்பட்ட விலங்குகளை வேறு ஒருவருக்கு விற்றிருத்தல் மற்றும் இறந்த விலங்குகளுக்குரிய காப்புறுதி இழப்பீட்டை உரியவாறு பெற்றுக் கொள்ளாமை என்பன அவதானிக்கப்பட்டதுடன், கால்நடை வளர்ப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது பிரதேசத்தின் அரச கால்நடை வைத்திய அலுவலகங்களின் பரிந்துரையைப் பெறுதல் மற்றும் கால்நடை வைத்திய அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும், அந்த மேற்பார்வை உரியவாறு நடைபெற்றிருக்காததுடன் , அது தொடர்பாகப் பிரதேச செயலகத்தாலும் போதுமான	எதிர்காலத்தில் இத்தகைய நிலைமைகளைத் தவிர்க்க உரிய பயனாளிகள் மற்றும் கால்நடை வைத்திய அலுவலகங்களை மேலும் அறிவூட்டவும் மற்றும் உரிய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுப்பதாகவும்.	செயற்திட்ட அளவுகோல்களுக்கு முரணாகச் செயற்பட்ட பயனாளிகள் தொடர்பாகப் பொருத்தமான நடவடிக்கை எடுக்கவும், கால்நடை அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது ஒவ்வொரு கட்டத்திலும் பிரதேச கால்நடை அதிகாரிகளின் ஒருங்கிணைப்பு, வழிகாட்டல், இயக்கம் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் செயற்பட்டு எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடையவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்படவில்லை.

(ஏ) “மலைநாட்டுத் தசாப்தம் 2024 – 2033 தசவிதம் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தின்” கீழ் மத்துகம பிரதேச செயலகத்தால் கிராமிய மக்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட தெரிவு செய்யப்பட்ட குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்குக் கோழிக் குஞ்சுகளை வழங்கும் 02 திட்டங்களுக்காக ரூபா 594,000 செலவிடப்பட்டிருந்ததுடன், 2025 பெப்ரவரி 06 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரீட்சிப்பின் போது பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட 800 கோழிக் குஞ்சுகளில் 136 குஞ்சுகள் இறந்து போயிருந்ததுடன், இது வழங்கப்பட்ட கோழிக் குஞ்சுகளின் எண்ணிக்கையில் 17 சதவீதம் ஆகும். இதில் இரண்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட 20 கோழிக் குஞ்சுகள் அனைத்தும் இறந்து போயிருந்தன. மேலும், பயனாளிகளுக்குக் கோழிக் குஞ்சுகளை வழங்கும் போது 1 1/2 மாத வயதான குஞ்சுகள் வழங்கப்பட்டிருந்தன, கணக்காய்வுத் திகதியான 2025 பெப்ரவரி 06 ஆம் திகதி கோழிக் குஞ்சுகளின் வயது 06 மாதங்களைக் கடந்திருந்த போதிலும், 24 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட கோழிக் குஞ்சுகளில் இறந்த விலங்குகள் தவிர மீதமுள்ள 199 குஞ்சுகள் இதுவரை முட்டையிடவில்லை என்பதும் மேலதிகமாக அவதானிக்கப்பட்டதுடன், இது இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கோழிக்

பயனாளிகளுக்கு அறிவித்து தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட போதிலும் பயனாளிகளின் கவனக்குறைவு காரணமாக விலங்குகள் இறந்தது எனவும், எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் ஏற்படாமல் தடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும், அபிவிருத்தி அதிகாரிகளின் மூலம் உரிய விட்டமின் வகைகள் மற்றும் உணவு வகைகளை விலங்குகளுக்கு வழங்குவதைக் கண்காணிப்பதன் மூலம் முட்டை உற்பத்தியை அதிகரிக்க எதிர்பாரக்கப்படுகிறது எனவும்.

கால்நடை அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது ஒவ்வொரு கட்டத்திலும் பிரதேச கால்நடை அதிகாரிகளின் ஒருங்கிணைப்பு, வழிகாட்டல், இயக்கம் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் செயற்பட வேண்டியதுடன் திட்ட இலக்குகளை அடைவதற்காக உரிய நிறுவனங்களின் உதவியுடன் ஒரு வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

	குஞ்சுகளில் 25 சதவீதம் ஆகும். எனவே, இந்தத் திட்டத்தின் நோக்கம் “குறைந்த வருமானம் கொண்ட கிராமிய மக்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்குப் போதுமான பங்களிப்பை வழங்குதல்” என்பது எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் நிறைவேறவில்லை.		
(ஐ)	“மலைநாட்டுத் தசாப்தம் 2024 – 2033 தசவிதம் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தின்” கீழ் பெறப்பட்ட ரூபா 02 மில்லியன் ஒதுக்கீட்டின் கீழ் வலல்லாவிட்ட பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்ட பலவத்த பிட்டிகல வீதியின் மிரிஸ்வத்த வரையிலான பகுதியை இராணுவ முகாமின் அணுகல் வீதியாக அபிவிருத்தி செய்யும் திட்டத்திற்காகத் தயாரிக்கப்பட்ட ரூபா 02 மில்லியன் மதிப்பீட்டின் படி வீதியின் அதிகபட்ச நீளம் அண்ணளவாக 300 மீற்றர் ஆகவும், அதிகபட்ச அகலம் 4.5 மீற்றர் ஆகவும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்காகப் பெறப்பட்ட கள அளவீடுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. இந்தத் திட்டத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப சாத்தியக்கூறு ஆய்வறிக்கையின் படி முன்மொழியப்பட்ட திட்டத்தின் மூலம் பயனடையும் நபர்களின் எண்ணிக்கை 95 ஆகவும், குடும்பங்களின் எண்ணிக்கை 25 ஆகவும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வால் 2025 ஜனவரி 15 ஆம் திகதி குறித்த வீதித் திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கள பௌதீகப் பரீட்சிப்பின் போது சம்பந்தப்பட்ட திட்டத்தின் வீதி அபிவிருத்திப் பணிகள் 1 ஆவது	பதில்கள் வழங்கப்படவில்லை.	கிராமிய அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் கிடைக்கும் ஒதுக்கீடுகள் பிரதேசத்தின் அதிகமான மக்கள் பயனடையும் வகையில் முன்னுரிமை அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதுடன் அவ்வாறு செயற்படாத உத்தியோகத்தர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை இராணுவ முன்னோடிப் படையணியின் பலவத்த இராணுவ முகாமின் உள்வீதி அபிவிருத்திப் பணிகளுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. இதன் படி வீதி அபிவிருத்தி பலவத்த இராணுவ முகாமின் உள்ளே 100 மீற்றர் நீளமுள்ள வீதியின் ஒரு பகுதியை முழுமையாகப் புதிதாகக் கட்டுவதற்கும், பொது அதிகாரியின் இல்லம் வரையிலான 84 மீற்றர் நீளமுள்ள மற்றுமொரு பகுதியை வீதிப் பழுதுபார்ப்பு செய்வதற்கும் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு இராணுவ முகாமின் நுழைவாயில் வீதியைப் பழுதுபார்ப்பதற்காகப் பெறப்பட்ட ரூபா 02 மில்லியன் ஒதுக்கீட்டில் பிரதேசவாசிகளால் கோரப்பட்ட அணுகல் வீதிக்குப் பதிலாக இராணுவ முகாமின் உள் வீதிகளை மட்டுமே அபிவிருத்தி செய்வதற்காக 2024 திசெம்பர் 15 ஆம் திகதி குறித்த ஒப்பந்ததாரருக்கு ரூபா 1,114,510 செலுத்தப்பட்டிருந்ததுடன், பிரதேசத்தின் வீதி அபிவிருத்திக்காகப் பெறப்பட்ட முழு ஒதுக்கீட்டையும் பயன்படுத்தி பிரதேசவாசிகளின் கோரிக்கைக்கு அமைய அத்தியாவசிய வீதியை அபிவிருத்தி செய்வதற்குப் பதிலாக இராணுவ முகாமின் உள்வீதிகளை மட்டுமே அபிவிருத்தி செய்ததன் மூலம் பிரதேசவாசிகளுக்கான எதிர்பார்க்கப்பட்ட நன்மைகள் கிடைக்காத நிலை ஏற்பட்டிருந்தது.

4.4 நட்டங்களும் சேதங்களும்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) மீளாய்வாண்டில் களுத்துறை மாவட்டச் செயலகத்தின் கட்டிட நுழைவாயிலுக்கு அருகில் இருந்த பிரதான மின் பலகையில் ஏற்பட்ட திடீர் தீ விபத்து காரணமாகக் கட்டிடத்தின் பாகங்களுக்கும் பிரதான மின் பலகை சுற்றியிருந்த முழு மின்சக்தி முறைமைக்கும் ஏற்பட்ட மொத்தச் சேதத்தின் பெறுமதி சுமார் ரூபா 7,500,000 என மதிப்பிடப்பட்டிருந்ததுடன், நிதிப் பிரமாணம் 104 (4) அறிக்கையின் படி சேதத்திற்குப் பொறுப்பான தரப்பாக இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம் தீர்மானிக்கப்பட்டு அது அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருந்த போதிலும், தீ விபத்துக்கான காரணம் என விசாரணைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட Bus-bar பலகை தமது நிறுவனத்திற்குச் சொந்தமானது அல்ல என அந்த நிறுவனம் தெரிவித்திருந்ததுடன், சேதத்திற்கான இழப்பீடு தொடர்பில் எந்த இணக்கமும் தெரிவிக்கவில்லை. அத்துடன், சம்பந்தப்பட்ட தீ விபத்து ஏற்பட்டு 2025 ஆகஸ்ட் 15 ஆம் திகதி வரை ஒரு வருடத்திற்கு மேல் கடந்துவிட்ட போதிலும், மாவட்டச் செயலகக் கட்டிடத்தின் சேதமடைந்த மின் விநியோகத்தை நிரந்தரமாக மீட்டெடுக்கவோ அல்லது ஒரு மாத காலப்பகுதிக்கு மட்டும் பொருத்தமான வகையில் தற்காலிகமாக வழங்கப்பட்ட மின் விநியோகத்தை மீட்டெடுக்கவோ முடியவில்லை.	கட்டிடத்தில் தீ விபத்துக்குக் காரணமான Bus-Bar பலகை இலங்கை மின்சார (தனியார்) நிறுவனத்திற்குச் சொந்தமான சொத்து என்று கட்டிடத் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளதாகவும். அதற்கேற்ப, தாமதமின்றி நிறுவனத்தின் செலவில் நிரந்தர மின் விநியோகத்தை மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்துள்ளதுடன், பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் மூலம் நிதி அமைச்சுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.	ஏற்பட்ட சேதத்தின் பெறுமதியைப் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து தாமதமின்றி அறவிட்டு, மின் முறைமையை நிரந்தரமாக மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ)	பேருவளை பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான ஒரு கெப் வண்டி 2025 மார்ச் 12 ஆம் திகதி பேருவளைக்கு அண்மித்த பிரதேசத்தில் புகையிரதத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியிருந்தது. அவ்வாறு இருந்த போதிலும், விபத்து ஏற்பட்டு கணக்காய்வுத் திகதியான 2025 ஜூலை 12 ஆம் திகதி வரை 04 மாதங்கள் கடந்துவிட்ட போதிலும், இது தொடர்பில் நிதிப் பிரமாணம் 104 இற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	பதில்கள் வழங்கப்படவில்லை.	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் விரைவாகப் பரீட்சிப்புகள் மேற்கொண்டு அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.5 முகாமைத்துவ நலிவுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மாவட்டச் செயலகத்திற்கான புதிய கட்டிடம் அமைப்பது தொடர்பாகச் செயற்திட்டத்தின் ஆலோசனைக் குழுவின் தகவல்களின் படி, ஒப்பந்தத்தின் இடைக்காலக் கொடுப்பனவுச் சான்றிதழ் இலக்கம் 20 வரையிலான கொடுப்பனவுகளின் படி அறவிட வேண்டிய திரட்டப்பட்ட தாமதக் கட்டணம் ரூபா 3,634,307 ஆக இருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 வரை அது அறவிடப்படவில்லை. சமர்ப்பிக்கப்பட்ட இறுதி பற்றுச்சீட்டான இடைக்காலக் கொடுப்பனவுப் பத்திரம் 20 இன் படி நிறைவேற்றப்பட்ட மேலதிக வேலையின் பெறுமதி ரூபா 8,358,049 ஆக இருந்த போதிலும், அதற்காகக் பெறுகை வழிகாட்டித் தொகுப்பின் ஏற்பாடுகளின் படி முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்காததுடன் விசேட விலை பகுப்பாய்வும் (SSR) முறையான மாற்றல்	தற்போது முழுக் கட்டிடமும் மாவட்டச் செயலகத்தின் ஒரு பகுதியாகப் பயன்படுத்தப்பட்டு வருவதால், கட்டிடத்தைப் பயன்படுத்திய காலப் பகுதியைக் கருத்தில் கொண்டு ஆலோசனை நிறுவனத்தால் தாமதக் கட்டணம் அறவிட வேண்டியிருந்தால், அதற்கான பொருத்தமான கணக்கீடு செய்வது பொருத்தமானது எனவும். ஆலோசனை நிறுவனத்தால் உரிய பரிந்துரைகளைப் பெற்று பெறுகை சபை அங்கீகாரம் பெற வேண்டும் எனவும். இந்த குறைபாடுகளைச் சரிசெய்வது ஆலோசனை நிறுவனத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் நடைபெற	இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவது குறித்துச் சுயாதீன விசாரணையை மேற்கொண்டு எஞ்சிய வேலைகளை நிறைவு செய்தல் மற்றும் சட்டப்பூர்வ ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளுதல் என்பன மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் உரிய பொறுப்புக் கூற வேண்டியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உத்தரவுகளும் (Formal Variation Orders) சமர்ப்பிக்கப்படவில்லை. கணக்காய்வு களப் பரீட்சிப்பின் போது ஒப்பந்தத்தின் படி டீசல் மின் பிறப்பாக்கியை வழங்கிப் பொருத்தாமை, ஒலி காட்சி முறைமையை முழுமைப்படுத்தாமை, ஒலி நிர்வாக முறைமையை முழுமைப்படுத்தாமை, நீர்த் தாங்கிகள் மற்றும் நீர்ப் பொறி தொடர்பான முறைமை இயங்காமல் இருந்தமை மற்றும் மின்சாரம் மற்றும் தீ பாதுகாப்பு முறைமை 2025 ஆகஸ்ட் மாதம் வரை இயங்கும் நிலைக்குக் கொண்டு வரப்படாமை போன்ற முக்கிய குறைபாடுகள் காணப்பட்டன. மேலும், நிர்மாணத் தரத்தில் இருந்து விலகியமை மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் நிர்மாணத்தை போதுமான அளவு மேற்பார்வை செய்யாமை காரணமாக 20 இற்கும் மேற்பட்ட நிர்மாணக் குறைபாடுகள் காணப்பட்டன. ஒப்பந்த உடன்படிக்கைகளின் பிரகாரம் குறைபாடுகளைச் சரிசெய்யுமாறு ஒப்பந்ததாரருக்குப் பல தடவைகள் அறிவிக்கப்பட்ட போதிலும், அந்தக் குறைபாடுகளில் ஒரு பகுதியைச் சரிசெய்ய மட்டுமே நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், சில குறைபாடுகளின் திருத்தங்களும் உரியவாறு நிறைவேற்றப்படவில்லை. இந்த ஒப்பந்தத்தின் வேலைகள் முழுமையாக நிறைவடைவதற்கு முன்னர் பகுதி பகுதியாக நிறைவு செய்யப்பட்ட நிர்மாணங்களை மாவட்டச் செயலகம் அவ்வப்போது பயன்படுத்தி வந்ததுடன், ஒப்பந்தத்தை இரு தரப்பினரின் இணக்கத்துடன் சட்ட ரீதியாக

வேண்டும் எனவும்.

இது தொடர்பாக மாவட்டச் செயலாளர் மற்றும் ஆலோசனை நிறவனத்துக்கும் இடையே இன்னும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும், அந்தப் பேச்சுவார்த்தைகள் மற்றும் ஆலோசனை நிறுவனத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வது பொருத்தமானது எனவும்.

	முடிவுக்குக் கொண்டுவர (Mutual Termination) தீர்மானிக்கப்பட்ட போதிலும், 2025 மே மாதம் வரை அது மேற்கொள்ளப்படவில்லை.		
(ஆ)	பேருவளை, ஹொரணை, பண்டாரகம, பாணந்துறை, அகலவத்தை, தொட்டங்கொட, மத்துகம மற்றும் களுத்துறை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் பல்வேறு நிதி மூலங்களிலிருந்து பெறப்பட்ட அரசாங்க நிதியில் கட்டிட நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, மொத்தம் ரூபா 42,884,718 செலவிடப்பட்டு, குறித்த கட்டிடங்களின் ஒரு பகுதி மட்டுமே நிறைவு செய்யப்பட்டு நீண்ட காலமாக நிர்மாணப் பணிகள் முழுமைப்படுத்தப்படாமல் இருக்கும் 27 கட்டிடங்களும், அவ்வாறு பகுதி நிர்மாணங்களுக்காகச் செலவிடப்பட்ட செலவைக் கண்டறிய முடியாத மேலும் 04 அரை நிறைவு செய்யப்பட்ட கட்டிடங்களும் காணப்பட்டன. இந்தக் கட்டிடங்களின் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டு தற்போது 02 முதல் 26 ஆண்டுகள் வரையான காலப்பகுதி கடந்துவிட்டதுடன், இந்தக் நிர்மாணங்களில் சில அத்திவாரம் மற்றும் தூண்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட இரும்புக் கம்பிகளுடன் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்தப் பகுதிகளும் நீண்ட காலமாக வெயில் மற்றும் மழைக்கு வெளிப்படுத்தப்பட்டதன் காரணமாக மீண்டும் பயன்படுத்த முடியாத நிலைக்கு வந்திருந்த காரணத்தால் அதற்காகச் செலவிடப்பட்ட அரசாங்கப் பணம் பயனற்றதாகி இருந்தது.	இந்தக் கட்டிடங்களில் பெரும்பாலானவை செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு நிர்மாணத்தை முழுமைப்படுத்தப் போதுமானதாக இல்லாததால், அவற்றின் வேலைகளை முடிக்க முடியவில்லை எனவும், பின்னர் அதற்காக நிதி ஒதுக்கப்படவில்லை எனவும்.	நிறைவு செய்யப்படாமல் கைவிடப்பட்டுள்ள அரை நிறைவு செய்யப்பட்ட கட்டிடங்களின் எஞ்சிய வேலைகளை நிறைவு செய்து, அவற்றின் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதில் கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் தேவை குறித்த முறையான முன்னுரிமைப்படுத்தல் மற்றும் முறையான சாத்தியக்கூறு ஆய்வுகள் இன்றி மேற்கூறிய கட்டிட நிர்மாணங்களுக்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தவர்கள் மற்றும் அங்கீகாரம் வழங்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(இ)	இலக்கம் 408-02-03-08 என்ற செலவினத் தலைப்பின் கீழ் புலத்சிங்கள பிரதேச செயலகப் பிரிவில் கிராமிய மற்றும் பாரம்பரிய கிராமங்கள் ஒருங்கிணைந்த அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் தேசிய கைத்தொழில் சபையால் பிரம்புக் கைத்தொழில் பயிற்சி நிலையம் மற்றும் மூலப்பொருட்கள் வங்கியை நிறுவுவதற்காக 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட ரூபா 4,365,000 ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அந்தக் கட்டிடங்களின் ஒரு பகுதி மட்டுமே நிறைவு செய்யப்பட்டிருந்தது. இதன் எஞ்சிய நிர்மாணங்களுக்காக 2023 ஆம் ஆண்டில் ரூபா 7,500,000 களுத்துறை மாவட்டச் செயலகத்திற்கு ஒதுக்கப்பட்ட போதிலும், 2023 திசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் திட்டக் கட்டுமானங்களை ஆரம்பித்து முடிக்க முடியாது எனக் கூறி, அந்த ஒதுக்கீட்டை நிராகரித்து, 2024 ஆம் ஆண்டிற்காகக் குறித்த ஒதுக்கீட்டைக் கோரியிருந்தனர். அதற்கேற்ப, இந்தக் நிர்மாணங்களுக்காக 2024 ஆம் ஆண்டில் தேசிய கைத்தொழில் சபையால் ரூபா 9,900,000 ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும், அந்த ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி குறித்த செயற்திட்டத்தை மீளாய்வாண்டிலும் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கைத்தொழில் அமைச்சால் உரிய காலத்தில் நிதி வழங்கப்படாமை, 2024 ஆம் ஆண்டின் இறுதி காலப்பகுதியில் செயற்திட்டத்திற்கான பெறுகை நடவடிக்கைகளை மேற்கொண்டு நிர்மாணத்தை ஆரம்பித்து முடிக்கப் போதுமான நேரம் இல்லாமை போன்ற காரணங்களால் இதன் வேலைகளை 2024 ஆம் ஆண்டிலும் எதிர்பார்த்தவாறு முடிக்க முடியவில்லை எனவும்.	முறையான விசாரணையை மேற்கொண்டு தேவை குறித்த முறையான முன்னுரிமைப்படுத்தல் மற்றும் முறையான சாத்தியக்கூறு ஆய்வுகள் இன்றி இந்தக் கட்டிட நிர்மாணங்களுக்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தவர்கள் மற்றும் அங்கீகாரம் வழங்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஒதுக்கீடுகள் உரியவாறு கிடைத்திருந்தும் குறித்த நிர்மாணங்களை உரிய காலப் பகுதிக்குள் முடிக்க நடவடிக்கை எடுக்காதது தொடர்பிலும் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	ஹொரணை பிரதேச செயலகத்தின் புதிய கட்டிடத்தின் இறுதிக் கட்ட வேலைகள் 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 32,435,820 செலவில் 2015 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன்,	பதில்கள் வழங்கப்படவில்லை.	முறையான விசாரணையை மேற்கொண்டு நிர்மாணத் தரம் குறைந்த குறைபாடுகளுடன் நிறைவு செய்த ஒப்பந்ததாரர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் இந்த

மீண்டும் 2016 ஆம் ஆண்டில் ரூபா 1,996,502 செலவில் வேலைகளை முடிப்பதற்காக மேலதிக வேலைப் பகுதி ஒன்றும் நிறைவேற்றப்பட்டு 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் அலுவலகப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. கட்டிடம் கட்டப்பட்டு குறுகிய காலப் பகுதிக்குள் இந்தக் கட்டிடத்தின் நிர்மாணங்களில் பல குறைபாடுகள் ஏற்பட்டு, கட்டிடத்தைப் பயன்படுத்தும் போது பல சிக்கல்களை எதிர்கொள்ள நேரிட்டதுடன், இந்தக் குறைபாடுகளைச் சரிசெய்யுமாறு ஒப்பந்ததாரருக்கு 04 தடவைகள் நினைவூட்டல்கள் அனுப்பப்பட்ட போதிலும், அவர் அந்தக் குறைபாடுகளை 2025 மார்ச் வரை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கவில்லை. அவ்வாறு இருந்த போதிலும், இந்தக் ஒப்பந்ததாரருக்கு மீண்டும் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், புதிய கட்டிடத்தின் மேல் தளத்தில் உள்ள விரிவுரை மண்டபத்தில் பதிக்கப்பட்ட 7.7 சதுர மீற்றர் பரப்பளவிலான டைல்ஸ் கழன்றதன் காரணமாக 2023 ஆம் ஆண்டில் ரூபா 803,290 செலவில் மீண்டும் டைல்ஸ் பதிக்கப்பட்டிருந்தது. நிர்மாணம் நிறைவடைந்த குறுகிய காலப் பகுதிக்குள் மேற்கண்டவாறு குறைபாடுகள் ஏற்படுவது உரிய தரங்களிலிருந்து விலகி நிர்மாணங்களை மேற்கொண்ட ஒப்பந்ததாரர்கள் மற்றும் மேற்பார்வை அதிகாரிகளின் குறைபாடுகளால் ஏற்பட்ட பலவீனங்கள் என்பதுடன், குறிப்பாக வடிகால் முறைமை மற்றும் நீர் விநியோக முறைமையின் குறைபாடுகளை விரைவாகச் சரிசெய்ய வேண்டியிருந்தது.

வேலைகளை மேற்பார்வை செய்த அதிகாரிகள் தொடர்பிலும் உரிய நடவடிக்கை எடுக்கவும் வேண்டும்.

(உ)	மாவட்டச் செயலகத்தால் பயன்படுத்தப்படும் 04 வாகனங்களின் உரிமை மாற்றம் செய்யப்படாமல் இருந்ததுடன், மாவட்டச் செயலாளர் பெயரில் பதிவு செய்யப்பட்ட 15 மோட்டார் சைக்கிள்கள் தொடர்பான தகவல்களைச் சமர்ப்பிக்க மாவட்டச் செயலாளர் தவறியிருந்தார். களுத்துறை மாவட்டச் செயலாளர் பெயரில் இருந்த 05 மோட்டார் சைக்கிள்கள் பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட அனர்த்தப் பிரிவுக்கு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த மோட்டார் சைக்கிள்களுக்கான தினசரி ஓட்டப் பதிவுகள் மாதாந்தம் குறித்த நிறுவனங்களால் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. மாவட்டச் செயலாளர் பெயரில் பதிவு செய்யப்பட்ட 05 உழவு இயந்திரங்கள் மற்றும் 07 பௌசர் டிரெய்லர்கள் மாவட்டச் செயலாளரால் பிரதேச செயலகங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அவை பயன்படுத்தப்படவில்லை எனவும், பல்வேறு சந்தர்ப்பங்களில் அவை பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த உழவு இயந்திரங்கள் மற்றும் பௌசர் டிரெய்லர்கள் அந்தப் பிரதேச சபைகளால் பயன்படுத்தப்படவில்லை எனவும், தற்போது அவற்றிற்குத் தேவை இல்லை என்பதால் மீண்டும் பிரதேச செயலாளர் / மாவட்டச் செயலாளரிடம் ஒப்படைக்கக் கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பாக மாவட்டச் செயலகத்தால் ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட்டுப் பொறுப்பேற்கப்படவில்லை.	இந்த 04 வாகனங்களை களுத்துறை மாவட்டச் செயலாளர் பெயரில் பதிவு செய்து உரிமை மாற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றது எனவும், மோட்டார் சைக்கிள்கள் தொடர்பாகப் பொதுக் கட்டுப்பாட்டாளரின் அறிவுறுத்தல்களின் படி செயற்படுவதாகவும், 03 மோட்டார் சைக்கிள்களுக்கு வருமான அனுமதிப் பத்திரங்களை வழங்க வேண்டாம் எனவும், கறுப்புப் பட்டியலில் சேர்க்குமாறும் மாகாண வருமான மோட்டார் வாகன ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும், பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட அனர்த்தப் பிரிவுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களுக்குரிய அனைத்து தினசரி ஓட்டப் பதிவுகளையும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்குமாறும், பயன்படுத்தப்படாத மோட்டார் சைக்கிள்களை மாவட்டச் செயலகத்திடம் ஒப்படைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது எனவும், இந்த உழவு இயந்திரங்கள் மற்றும் பௌசர்களைப் பிரதேச சபைகளுக்கு மாற்றுவது தொடர்பாக மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது எனவும்.	மாவட்டச் செயலகத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து வாகனங்களின் உரிமை மற்றும் இருப்பை உறுதிப்படுத்த மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் முறையான ஒருங்கிணைப்பைப் பேணி, சொத்துக்களின் இருப்பையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் ஒரு வேலைத் திட்டத்தை வகுக்க வேண்டும்.

(ஊ)	பிரதேச செயலகங்களால் பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனங்களைப் பழுதுபார்க்கும் போது, அதற்காகக் கோரப்பட்ட விலைமனுக்கள் போலியானவை என்றும், அவை ஒரே ஒரு வாகனப் பழுதுபார்க்கும் நிலையத்தில் இருந்து பெறப்பட்டவை என்றும் வெளிப்படுத்தப்பட்ட போதிலும், அந்தப் பழுதுபார்க்கும் நிலையங்களைப் பட்டியலிடாமல் இருந்தமை மற்றும் அதற்காகப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் மீது போதுமான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்காமை, அத்துடன் அதன் பிறகு மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்ப்புகள் தொடர்பில் பெறுகைக் குழுக்களில் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களின் நம்பகத்தன்மை குறித்துப் போதுமான உறுதிப்படுத்தலைப் பெற்றுக் கொள்ளாமை, பழுதுபார்க்கும் நிலையம் முதலில் குறைந்த விலைக்கு விலைமனுவைச் சமர்ப்பித்து, பழுதுபார்ப்பதற்காக வாகனங்களை அந்த நிறுவனத்திற்கு அனுப்பும் போது வேறு குறைபாடுகள் இருப்பதாகத் தெரிவித்து அதிக பணத்திற்கான மதிப்பீடுகளைத் தொடர்ச்சியாகச் சமர்ப்பித்தல், பழுதுபார்ப்பு மற்றும் உதிரிப் பாகங்கள் சேர்த்தல், டயர் மற்றும் மின்கலங்கள் சேர்த்தல் போன்றவற்றை ஓட்டப் பதிவேடுகளில் பதிவு செய்யாமை, பழுதுபார்ப்பு மற்றும் டயர் சேர்ப்புகளின் போது மோட்டார் வாகனப் பரிசோதகரால் முன் மற்றும் பின் பரீட்சிப்புகளை மேற்கொள்ளாமை, உரிய தூர வரம்புகளுக்குள் மோட்டார் வாகனங்களில் Wheel Alignment செய்யாததால்	கெப் வண்டி சம்பவம் தொடர்பான உரிய விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், சாரதியை மாவட்டத்திற்கு வெளியே இடமாற்றம் செய்ய ஒருங்கிணைந்த சேவைப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும். சாரதிகள் மற்றும் உரிய விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி வேலைத் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும், இந்த ஆண்டில் அவற்றை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும்.	மோட்டார் வாகனப் பழுதுபார்ப்புகளில் முறைகேடுகளுடன் தொடர்புடைய அனைத்து உத்தியோகத்தர்கள் மீதும் போதுமான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அந்த முறைகேடுகளுடன் தொடர்புடைய பழுதுபார்க்கும் நிலையங்களைக் கறுப்புப் பட்டியலிடவும் மோட்டார் வாகனப் பாவனை தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	டயர்களின் ஆயுட்காலம் குறைதல் போன்ற பல முறைமை மற்றும் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன. இதன் படி, பிரதேச செயலகங்களின் வாகனப் பாவனை தொடர்பாகப் போதுமான உளளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் இல்லாததுடன், தற்போதுள்ள உளளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகளைப் பின்பற்றாமையும் இடம்பெற்றிருந்தது.		
(எ)	“அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களை மீள் குடியேற்றல்” திட்டத்தின் கீழ் மத்துகம பிரதேச செயலகத்தால் ரூபா 2,975,000 நிதியுதவி வழங்கப்பட்டு மீள் குடியேற்றப்பட்ட 02 வீடுகளைப் பயனாளிகள் வேறொருவருக்கு மாற்றியிருந்த போதிலும், இந்தப் பயனாளிகள் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மாவட்டச் செயலாளரிடம் ஆலோசனை கோரியதைத் தவிர 2025 பெப்ரவரி வரை இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அனர்த்த நிவாரண சேவைகள் மத்திய நிலையத்திடம் இது குறித்து மேலும் விசாரித்து, கிடைக்கும் ஆலோசனைகள் மற்றும் உத்தரவுகளுக்கு அமைய மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதாக.	அனர்த்த நிவாரண சேவைகள் மத்திய நிலையத்துடன் தொடர்பு கொண்டு இது தொடர்பாக மேலதிக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஏ)	மீளாய்வாண்டில் ஓய்வூதியம் வழங்குவது தொடர்பாக 09 பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது, 09 பிரதேச செயலகங்களிலும் 2024 ஆம் ஆண்டில் 72 தற்காலிகக் கோவைகளின் அடிப்படையில் ரூபா 12,108,247 ஓய்வூதியமாக வழங்கப்பட்டிருந்ததுடன், பேருவளை பிரதேச செயலகத்தால் எந்தக் கோவைகளும் இன்றி 20	பதில்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.	முறையான விசாரணையை மேற்கொண்டு முறைகேடாகச் செயற்பட்ட உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், ஓய்வூதியக் கோவைகள் மற்றும் ஆவணங்களைப் பராமரிப்பது தொடர்பாக முறையான உள்ளகக் கட்டுப்பாட்டை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்க

	ஓய்வூதியர்களுக்கு ரூபா 3,978,836 ஓய்வூதியமாக வழங்கப்பட்டிருந்தது. காணாமல் போன கோவைகள் எப்போது, எந்த அதிகாரியின் பொறுப்பில் இருந்த போது காணாமல் போயின என்பதைக் கண்டறிய முடியவில்லை. ஓய்வூதியம் வழங்கும் பிரிவில் ஓய்வூதியக் கோவைகள், ஓய்வூதியம் பெறுபவர் இறப்பது அல்லது வேறு காரணங்களால் மாறும் கோவைகள், புதிதாகச் சேர்க்கப்படும் கோவைகள் தொடர்பான தகவல்கள் ஓய்வூதியக் கோவைகள் தொடர்பான பதிவேட்டில் சேர்க்கப்பட்டு அந்தக் கோவைகளை ஓய்வூதிய அதிகாரிகளிடம் ஒப்படைத்தல் மற்றும் அதிகாரிகள் ஓய்வு பெறும் அல்லது இடமாற்றம் செய்யப்படும் போது அதிகாரிகள் வசம் உள்ள கோவைகளை ஒழுங்கான முறையில் ஒப்படைத்தல் மற்றும் பொறுப்பேற்றல் என்பன எந்தச் சந்தர்ப்பத்திலும் நடைபெறவில்லை. இதன் காரணமாகக் கோவைகள் காணாமல் போதல், போதுமான ஆவணங்கள் கோவையில் சேர்க்கப்படாமை, சம்பந்தப்பட்ட பொறுப்பான அதிகாரிகள் யார் என்பதைக் கண்டறிய ஒழுங்கான முறைமை நிறுவப்படாமை போன்றவற்றால் ஓய்வூதியக் கோவைகள் மற்றும் ஆவணங்களைப் பராமரிப்பது குறித்துப் போதுமான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.		வேண்டும்.
(ஐ)	கணிப்பீட்டு வழுக்கள் அல்லது வேறு காரணங்களால் களுத்துறை மாவட்டத்தில் உள்ள 08 பிரதேச செயலகங்களில் 66 ஓய்வூதியக் கோவைகளில் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் அதிகமாகச் செலுத்தப்பட்ட ஓய்வூதியப்	பதில்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.	அதிகமாகச் செலுத்தப்பட்ட பணத்தை தாமதமின்றி அறவிட வேண்டியதுடன் முறையான விசாரணையை மேற்கொண்டு பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் மீது

	பணம் ரூபா 11,102,428 ஆக இருந்ததுடன், அவை தவணை முறையில் அறவிடப்பட்டு வந்தது. அவற்றில் 03 பிரதேச செயலகங்களில் 07 ஓய்வூதியதாரர்கள் இறந்ததன் காரணமாக ரூபா 313,044 அறவிடப்படாமல் இருந்தது.		உரியவாறு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஓ)	இங்கிரிய பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரால் பாராளுமன்ற ஆலோசனைக் குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி, இங்கிரிய மற்றும் ஹொரணை பிரதேச செயலகப் பிரிவுகளில் மண் மற்றும் மணல் அகழும் நடவடிக்கைகளுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கும் போது பிரதேச செயலகத்தில் நிறுவப்பட்டுள்ள சுற்றாடல் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அங்கீகாரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்திற்கு மண் மற்றும் மணல் தொடர்பான அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்காகச் குறித்த பிரதேச செயலாளரின் பரிந்துரைகளைச் சமர்ப்பிக்கும் போது, பிரதேச செயலகத்தில் நிறுவப்பட்டுள்ள சுற்றாடல் குழுவின் முடிவின் படி செயற்பட்டுப் பரிந்துரைகளை வழங்குமாறு புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் இங்கிரிய பிரதேச செயலாளருக்கு அறிவித்திருந்தார். அவ்வாறு இருந்த போதிலும், 2024 செப்டெம்பர் 12 வரை மண் மற்றும் மணல் அகழும் நடவடிக்கைகளுக்காக 26 விண்ணப்பங்கள் இங்கிரிய பிரதேச செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டிருந்த	தேவைப்பட்டால் பிரதேச சுற்றாடல் குழுவின் பரிந்துரைகளைப் பெற பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், அத்தகைய தேவை எழாததால் அந்த விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளது எனவும்.	சட்ட ரீதியான ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயற்பட்ட உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், மண் மற்றும் மணல் அகழும் நடவடிக்கைகளுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கும் போது பிரதேச செயலகத்தில் நிறுவப்பட்டுள்ள சுற்றாடல் குழுவின் பரிந்துரையின் பேரில் அங்கீகாரம் வழங்கவும் வேண்டும்.

	போதிலும், எந்தச் சந்தர்ப்பத்திலும் சுற்றாடல் குழு அறிக்கைகள் பெறப்பட்டிருக்கவில்லை.		
(ஓ)	களுத்துறை மாவட்டக் கணக்காய்வு முகாமைத்துவக் குழு கூட்டங்களில் உள்ளூராட்சி மன்றங்களிடமிருந்து பொறுப்பேற்க வேண்டிய காணிகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட வேண்டிய காணிகளை அடையாளம் கண்டு உரியவாறு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட போதிலும், மாதிரிப் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்ட களுத்துறை மாவட்டத்தின் 03 பிரதேச செயலகங்களால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட வேண்டிய 73 காணித் துண்டுகளின் ஒப்படைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	உள்ளூராட்சி மன்றங்களிடமிருந்து பொறுப்பேற்க வேண்டிய காணிகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட வேண்டிய காணிகளை அடையாளம் கண்டு உரியவாறு வழங்க நடவடிக்கை எடுப்பதாக.	பொறுப்பேற்க வேண்டிய மற்றும் வழங்கப்பட வேண்டிய அரச காணிகள் தொடர்பாகக் காலத்துக்குக் காலம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.6 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்காமை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மாவட்டச் செயலகத்திற்கு 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளுக்காக வழங்கப்பட்ட 14 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2025 ஆகஸ்ட் 15 ஆம் திகதி வரை பதில்கள் அனுப்பப்பட்டிருக்காததுடன், 03 மாதங்களுக்கு மேல் கடந்துவிட்ட போதிலும் பதில்கள் வழங்கப்படாத ஐயவினாக்களின் எண்ணிக்கை 09 ஆக இருந்தது.	2024 ஆம் ஆண்டிற்காக 61 கணக்காய்வு ஐயவினாக்கள் பெறப்பட்டுள்ளதுடன், தற்போது 53 இற்குப் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் 08 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு மேலும் பதில்களைச் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது எனவும்.	கணக்காய்வு ஐயவினாக்களுக்குக் காலத்துக்குக் காலம் பதில்களை வழங்கி உரிய திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.

5. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றும் முன்னேற்றம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மாவட்டச் செயலகத்தால் 2030 நிலையான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் 17 இலக்குகளின் கீழ் அபிவிருத்திச் செயற்பாடுகள் அடையாளம் காணப்பட்ட போதிலும், அந்தந்த அபிவிருத்திச் செயற்பாடுகளின் வெற்றிக் சுட்டிகளில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளையும் அந்த ஆண்டில் அந்த இலக்குகளை அடைவதையும் புள்ளிவிபரவியல் ரீதியாக அளவிடக்கூடிய ஒரு குறிப்பிட்ட சுட்டியாக (KPI) கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்காததால், மீளாய்வாண்டில் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான செயலாற்றுகையை கணக்காய்வால் உறுதியாக அளவிட முடியவில்லை.	எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதைப் புள்ளிவிபரவியல் ரீதியாக அளவிடக்கூடிய வகையில், ஒரு குறிப்பிட்ட சுட்டியாக முக்கிய செயலாற்றுகை சுட்டிகளை (KPI) கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக.	நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான செயலாற்றுகையை மதிப்பிடுவதற்கு, அந்தந்த அபிவிருத்திச் செயற்பாடுகளின் வெற்றி சுட்டிகளில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளையும் அந்த ஆண்டில் அந்த இலக்குகளை அடைவதையும் புள்ளிவிபரவியல் ரீதியாக அளவிடக்கூடிய ஒரு குறிப்பிட்ட குறிகாட்டியாக (KPI) சமர்ப்பிக்க வேண்டும்.

6. மனித வள முகாமைத்துவம்.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	களுத்துறை மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான பிரதேச செயலகங்களில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை விட அதிகமான அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன்,	அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானத்தின் படி அந்த உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு இணைக்கப்பட்டுள்ளனர் என்பது.	அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகளுக்கு இணங்கப் பதவிகளைப் பேண அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினைத் திருத்தியமைக்க நடவடிக்கை எடுத்தல்.

மாதிரிப் பரீட்சிப்புக்கு உட்படுத்தப்பட்ட 06 பிரதேச செயலகங்களில் மட்டும் அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை விட அதிகமாகச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களிகளின் எண்ணிக்கை 80 ஆக இருந்தது.